செயல்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் தொழில் நிறுவனங்கள் அமையும் வகையில், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் உள்ள நெமிலி மற்றும் மன்னூர் கிராமங்களில் சுமார் 150 ஏக்கர் நிலப்பரப்பில், 500 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், தரவு மைய பூங்கா ஒன்றினை டிட்கோ உருவாக்கும். இப்பூங்காவில் செயல்பாட்டுக்கு வரும் தொழில் நிறுவனங்கள்மூலம் சுமார் 3,500 புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும். நவீன யுகத்தின் பெரும் சொத்தாகக் கருதப்படும் தகவல் தரவுகளுக்கான தொழில் பூங்கா தமிழ்நாட்டில் அமைக்கப்படுவதன்மூலம், தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாடு மேலும் முன்னேற்றம் அடைந்திடும் என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) சென்னையில் புத்தொழில் மற்றும் புத்தாக்க நகரம், கோயம்புத்தூர் வட்டம், கல்லப்பாளையத்தில் தனியார் தொழிற்பூங்கா அமைத்தல் மற்றும் மின்சார வாகன உபகரணங்கள் உற்பத்தி செய்யும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு சிறப்பு மூலதன மானியம் வழங்குதல் குறித்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைமூலம் நடப்பாண்டில் செயல்படுத்தப்படவிருக்கும் அறிவிப்புகளை இப்பேரவையில் வெளியிடுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

1. புத்தாக்கங்கள் மற்றும் அறிவுசார் நிறுவனங்களின் (Innovation and Knowledge based firms) செயல்பாடுகளை ஆதரித்து, புத்தொழில்கள் உருவாக்கும் நோக்கத்துடன், உட்கட்டமைப்பு சேவைகள் மற்றும் வணிகச் சூழலுடன்கூடிய ஒரு புத்தொழில் மற்றும் புத்தாக்க நகரம் (Startup and Innovation City) சென்னையில் 350 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

2. தமிழ்நாடு அரசின் பங்களிப்புடன் தனியார் தொழிற்பூங்கா உருவாக்கும் திட்டத்தின்கீழ், கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், கல்லப்பாளையம் கிராமத்தில் 116.24 ஏக்கர் பரப்பளவில், 20 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பில், கொடிசியாமூலம் ஒரு புதிய தனியார் தொழிற்பூங்கா அமைக்கப்படும். இத்திட்டத்திற்கு அரசின் மானியமாக 10 கோடி ரூபாய் வழங்கப்படும்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2020 மார்ச் 24

3. தமிழ்நாடு மின்சார வாகன கொள்கை–2019–ன் அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாட்டில் மின்சார வாகன உபகரணங்கள் உற்பத்தி செய்யும் மற்றும் மின்சாரம் ஏற்றும் கட்டமைப்புக்குத் தேவையான உபகரணங்களை உற்பத்தி செய்ய தொடங்கப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில், அதிகபட்சமாக 50 இலட்சம் ரூபாய் வரை, 25 சதவீதம் சிறப்பு மூலதன மானியமும், அதிகபட்சமாக 10 இலட்சம் ரூபாய் வரை, தகுதி வாய்ந்த இயந்திர தளவாடங்களின் மதிப்பில் 20 சதவீதம் வரை, கூடுதல் சிறப்பு மூலதன மானியமும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(உ) உயர் ரக பொலி காளைகள் உற்பத்தி செய்தல் மற்றும் தூத்துக்குடி, தேனி மாவட்டங்களில் பால் பண்ணைகள் நிறுவுதல் உள்ளிட்ட பால் வளத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வளத் துறையின்மூலம் பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:

1. பால் உற்பத்தித் திறன் அடிப்படையின்மூலம் பிறந்த கிடாரிகளின் வம்சாவழி சோதனை திட்டத்தின்மூலம் 20.87 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 180 உயர் ரக பொலி காளைகள் உற்பத்தி செய்யப்படும்.

2. பால் உற்பத்தியாளர்களின் கால்நடைகளுக்கு தரமான பசுந்தீவனம் அளிக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில்கொண்டு, 25 ஆயிரம் ஏக்கர் அளவிற்கு விவசாயிகளின் பட்டா நிலங்கள் கண்டறியப்பட்டு, அதில் பசுந்தீவன புல் பயிரிட மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள்மூலம் 37.50 கோடி ரூபாய் மானியத்தில் வேளாண் உள்ளீடுகள் வழங்கப்படும். மேலும், அந்நிலங்களில் 50 கோடி ரூபாய் மானியத்தில் 'பிரதம மந்திரி கிரிஷி சின்ஜாயி யோஜனா' திட்டத்தின்கீழ் நுண்ணீர் பாசன வசதிகள் செய்து தரப்படும்.

3. தூத்துக்குடி மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 50 ஆயிரம் லிட்டர் பால் கையாளும் திறன் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருட்கள் தயாரிக்கும் வசதியுடன்கூடிய புதிய பால் பண்ணை, 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.